ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2302/35 - 2022 ඔක්තෝබර් මස 21 වැනි සිකුරාදා - 2022.10.21
*2302/35 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*39 அ (1) ஆம் பிரிவின் கீழ் கட்டளை*

*2013 ஆம் ஆண்டின் மாச்சு மாதம் 20 ஆந் திகதிய 1802/14 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 82 ஆம் இலக்க கட்டளையில் குறிப்பிடப்பட்ட காணித்துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ், இக் காணித்துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான் குறித்த காணித்துண்டுகளில் கீழ்வரும் 1 அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித்துண்டினை இக்கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.*

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்.

எனது இல. : *4-3/10/2012/*LRB*/21.*
காணி எடுத்தற் உத்தியோகத்தரின் இல. :
WGSWD&EIP/ACQ/KB/08.
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
“மிஹிகத மெதுர”, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
*2022,* ஒற்றோபர் *05.*

#### அட்டவணை

மேல் மாகாணத்தில், கொழும்பு மாவட்டத்தில், கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில், இல. 535B, திவுல்பிட்டிய மேற்கு கிராம அலுவலர் பிரிவில், திவல்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட CO/KSB/ *2019/499* ஆம் இலக்க, *2020.10.08* ஆந் திகதிய வரைபடத்தில் விபரமாக குறிப்பிடப்பட்ட பின்வரும் பெயர்கள் விஸ்தீரணங் களைக் கொண்ட காணித்துண்டின் எல்லைகள்:

*1.* **துண்டு ‘B’ - வரி மதிப்பீட்டு இல. 48ஏ மற்றும் 48பீ ஸ்ரீ மஹா போதிராஜாராம வீதி - விஸ்தீரணம் : சுமார் 0.0609 ஹெக்டயார்**

வடக்கு : ஆ. வ. கொ. *9470* இல் துண்டு இல. *19* மற்றும் *18* ; கிழக்கு : ஆ. வ. கொ. *9470* இல் துண்டு இல. *18* மற்றும் *19* ; தெற்கு : ஆ. வ. கொ. *9470* இல் துண்டு இல. *19* ; மேற்கு : ஆ. வ. கொ. *9470* இல் துண்டு இல. *19.*

EOG *10 - 0188*